*1 ஜுன், 2015*

**பணிவுத்தன்மையும் மரியாதையும்**

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் உயர்ந்த நிலையிலுள்ள சமய மற்றும் ஆன்மீக தலைவர்கள் Global Retreat Centre ரில் கூடினார்கள். மிகப்பெரிய மதங்களை பின்பற்றுபவர்களில் இருந்து சுமார் 35 பங்கேற்பாளர்கள் இருந்தனர். “உள்ளார்ந்த குரல்” என்னும் தலைப்பில் நாங்கள் பேச்சுவார்த்தையை அதிக அமைதியோடு பரிசோதித்தோம். தாதி இரண்டாவது நாள் குழுவை சந்தித்தார். நான் அதன் பின்னர் அவருடைய அறையில் தனியாக இருந்தபோது, “தாதி நீங்கள் இந்த ஒன்றுகூடல் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?' என கேட்டேன். அவர் மிகவும் யோசனையுடன் இந்த ஒன்றுகூடலிலிருந்து கற்றுக்கொள்வதற்கு அதிகம் உள்ளது என்றார். கடவுளின் மீது தங்கள் சொந்த வழியில் மரியாதையும் அன்பும் வைத்துள்ளவர்கள் மீது தாதி கொண்ட பணிவுத்தன்மையாலும் உண்மையான மரியாதையினாலும் நான் கவரப்பட்டேன்.

அந்த ஆத்மாக்களின் வாய்மையை அவரால் உணர முடிந்தது. தாதியின் முதல் ஜெருசேலப் பயணத்தின் போது அவருடன் செல்லும் அதிர்ஷ்டம் எனக்கு வாய்த்தது. மேற்கத்திய சுவருக்கு அவரை அழைத்து சென்றோம். அவர் சுவற்றிலிருந்து பின்புறமாக, அதாவது தமது முதுகை சுவற்றின் பக்கம் திருப்பாமல் இருக்கும்படி நடந்து சென்ற ஒரு ஆச்சாரமான பெண்ணை பார்த்து தாதியும் அவ்வாறே செய்ய தொடங்கினார். மீண்டும் அவருடைய பணிவுதன்மையினாலும் மரியாதையாலும் கவரப்பட்டேன். பாபா எவ்வாறு முழு மரத்திற்கும் கருவியாக்க அவரை தயாராக்கினார் என்பதை உணர்ந்தேன்.

*விவேகம் நிறைந்த வார்த்தைகள்:*

என்னுடைய எண்ணங்களில் பணிவுதன்மையையும் இனிமையும் மற்றும் நேர்மையும் பொறுமையும் இருப்பது அவசியமானது. தேவையற்ற எண்ணங்கள் இல்லாதிருப்பதில் நான் கவனம் செலுத்த வேண்டும். அதில் என்னுடைய ஆற்றலை நான் செலவிட வேண்டாம். அதன்பின்னர் உள்ளே நான் சேமித்துவைத்த சக்தி அனைத்தையும் அன்புடன் செய்வதற்கு என்னை அனுமதிக்கும். நான் பாபாவை போன்றே அதே தரமான எண்ணங்களை கொண்டிருப்பதில் கவனம் செலுத்த வேண்டும். பிரம்மா பாபா மற்றவர்களைப் பற்றி புகார் கடிதம் படித்து நான் பார்த்திருக்கின்றேன் - அவரது முகம் மாறியதே இல்லை. நான் என்னுடைய நினைவுசின்னம் எவ்வாறு இருக்கும் என யோசிக்க வேண்டும். நான் ஏற்ற இறக்கங்களை உருவாக்கினால், என் நினைவுசின்னம் எவ்வாறு இருக்கும்?

நாம் கடவுளின் எல்லையை கண்டுபிடித்து விட்டோம், ஆனால் நாம் ஒரு மனிதனின் எல்லைக்கு செல்ல முடியாது. ஏனென்றால் அவர்கலுக்குள்ளே அனைத்து வகையான விஷயங்களும் இருக்கின்றன. மற்றவர்களை பற்றி சிந்திப்பது உங்களை முழுமையாக சீரழித்துவிடும். ஒரு நல்ல சுற்றுசூழ்நிலையை உருவாக்குவதே என்னுடைய கடமையாகும். அது யாருடைய விவரங்களுக்குள்ளும் செல்லாமல் இருப்பதாகும். கிழக்கையும் மேற்கையும் இணைப்பதற்கு நமக்கு அதிகமான யோக சக்தி தேவைப்படும். இதை செய்யுங்கள். மக்கள் உண்மையில் இதுவே சத்யுகம் என உணர்வார்கள். “நான்” மற்றும் “என்னுடையது” என்பதை விட்டுவிட வேண்டும். நான் பாபா மற்றும் யக்யத்திற்கு நெருக்கமாக வர வேண்டும். அதனால் என்னால் மற்றவர்களையும் நெருக்கத்தில் கொண்டு வர முடியும். மற்றவர்களை உயர்த்துவதற்கு, நான் என்னுடைய சகவாசத்தை அவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

சுய மரியாதை இல்லை என்றால், நீங்கள் உங்களையோ அல்லது மற்றவர்களையோ நேசிக்க முடியாமல் இருக்கின்றீர்கள். மரியாதையை கேட்க வேண்டாம் ; ஆனால் மரியாதை பெற தகுதிவாய்ந்தவர்கள் ஆகவேண்டும். நீங்கள் மற்றவர்களிடமிருந்து நல்லாசிகளை ஏற்றுக்கொள்வதில் அவசியம் கவனம் செலுத்த வேண்டும். ஒருமுகப்படுத்தும் சக்தியால், நீங்கள் விவேகம் மற்றும் ஞானமுள்ளவராக ஆக முடியும். கவனம் செலுத்த முடிகின்றவர்களால்

அனைத்து சூழ்நிலைகளிலும் அமைதியாக இருக்க முடியும். அமைதியாக இருப்பதனால் உங்களால் அனைத்தையும் புரிந்துணர்வோடு செய்ய முடியும். புரிந்துணர்வால் நீங்கள் எளிதாக உண்மையான ஞானமுள்ளவராகவும், அமைதியானவராகவும் மற்றும் அன்பானவராகவும் ஆகமுடியும்.

*திருஷ்டிக்கான கருத்து:*

அனைத்து ஆத்துமாக்களுக்கும் மரத்தில் தங்களுக்கென சிறப்பான இடம் இருக்கின்றது என்பதை புரிந்து கொள்கின்றேன். இன்று நான் சந்திக்கின்ற ஒவ்வொரு ஆத்மாவும் கடவுளுடைய குழந்தை என நான் சிந்திக்கின்றேன், மேலும் தங்களுடைய சொந்த வழியில் கடவுளிடம் அன்பு வைத்துள்ளனர். என்னால் ஒவ்வொருவருக்கும் மரியாதை கொண்டிருக்கமுடிகின்றது. அவர்களை இவ்விதத்தில் அவர்களை என்னுடைய பார்வையில் வைத்திருக்கும்போது, பணிவுதன்மையுடன் ஒளி மற்றும் நல்லாசிகளை அனுப்ப முடிகின்றது.

*கர்மயோக கருத்து:*

இன்று நான் செய்ய வேண்டிய, ஒவ்வொரு பணியிலும் நான் கவனம் செலுத்தும்போது, நான் ஒரு பாபாவுடன் இணைக்கப்பட்டு அனைத்து ஆத்மாகளின் மரத்திற்கும் சக்தி கொடுகின்றேன் என்பதை நினைவு செய்கின்றேன். நான் அனைவருடனும் அனைத்து விதமான சம்பந்தங்களிலும் தொடர்பில் வரும்போது, இணைப்பில் இருகின்றேன், அதனால், நான் அவர்களை மிகுந்த ஆன்மீக மரியாதையோடு நடத்தக்கூடும்.